Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 18 உ வியாழக்கிழமை (04 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 14 ஓசை 229

## சிறிலங்கா வெளியேறியது

(கொழும்பு)

உலகின் கிறிஸ்தவ அமைப்புக்கள் இலங்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்று இலங்கையின் கிறிஸ்தவ மதபீடம் கண்டனம் செய்துள்ளது. அத்துடன் உலகளாவிய கிறிஸ்தவ மதபீடத்திலிருந்து விலகித் தனித்துச் செயற்படப் போவதாகவும் அறிவித்துள்ளது. வெளிநாடுகளிலுள்ள கிறிஸ்தவ மதபீடத்தைச் சார்ந்தவர்கள் அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து அவ்வப்போது தகவல்கள் வெளியிட்டு வந்துள்ளமை தெரிந் (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையால்

# கிளிநொச்சி பிரதேச சபைக்கு

# இரண்டு கோடி இழப்பு

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளால் கிளிநொச்சி பிரதேச சபைக்கு சுமார் இரண்டு கோடி ரூபா சொத்து நாசம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச சபையின் நிர்வாக அதிகாரி க. சுப்பிரமணியக் குருக்கள் தெரிவித்தார்.

கிளிநொச்சி நகரில் பிரதேச சபை அலுவலகம், நகரமண்டபம், நூலகம், பொதுச்சந்தை, களஞ்சியசாலைகள், பொது நூலகத்தில், இருந்த ஆறாயிரம் புத்தகங்கள், பரந்தன் மரக்கறி மாக்கற், மின்சார உபகரணங்கள் உட்பட பிரதேச சபைக்கு சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் திவைத்தும், விமானக் குண்டு வீச்சாலும் முற்றாகச் சேதமாகிவிட்டது. இலட்சக் கணக்கான ரூபாய் வருமான இழப்புகளும் ஏற்பட்டுள்ளது, இதனால் பிரதேச சபையை நம்பிருந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதிலும் சிரமங்களை எதிர்நோக்குகிறோம் என்று தெரிவித்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்மணி காயம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியில் பெண்மணி ஒருவரை சுட்டுக் காயப்படுத்தி உள்ளனர்.

நேற்று முன்தினம் திருமதி சில்வஸ்டர் (வயது 37) என்ற இப் பெண் தனது இரு பிள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொழிலாளி காலை இழந்தார்

(ஊர்காவற்றுறை)

கரம்பனில் தொழிலாளி ஒருவர் சிறிலங்கா இராணுவத்தின் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தமது வழமையான பனந்தோப்புப்பகுதிக்கு சென்று கொண்டிருந்த போது இச்சம்பவம் நிகழ்ந்தது சாம்சன் (வயது-15) என்ற இவரின் தாய் தந்தையர் மிக அண்மையில் தான் மரணமானதாகவும் இதனால் இவர் மானிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழர் சுட்டுக் கொலை; வீடுகள் தீக்கிரை

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புக்கும் தாழங்குடாவிற்கும் இடையில் மூன்று தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டனர்: அப்பகுதியிலுள்ள மூன்று வீடுகள் இராணுவத்தினரால் எரித்து நாசமாக்கப்பட்டன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிகரெட் வியாபாரி பிடிபட்டார்

(கோண்டாவில்)

விடுதலைப்புலிகள் சிகரெட் விற்பனைத் தடை உத்தரவை மீறிக் கோண்டாவில் பகுதியில் சிகரெட் வியாபாரம் செய்த பாலகிருஷ்ணன் என்பவர் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ வாகனஅணி ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் கடந்த திங்கட்கிழமை தாக்கியதில் இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி இராணுவ முகாமில் இருந்து இராணுவ வாகனங்களில் மட்டக்களப்பு (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு பொலிஸ் அதிகாரி மரணம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அறந்தலாவை என்னும்இடத்தில் புலிகளின் தாக்குதலுக்கு ஒரு பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டதாகவும், மூவர் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐந்து ஊர்காவற்படையினர் கெப்பிட்டிக்கொலாவாவில் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்ட கெப்பிட்டிக்கொலாவா என்ற இடத்தில் சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் நடந்த இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் பின்வரும் ஆயுதங் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் மேலும் ஒரு சடலம் ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கு முத்து மாரியம்மன் கோவில் முன்பாகவுள்ள கடற்கரைப் பகுதியில் முப்பது வயது மதிக்கத்தக்க நபரொருவரின் சடலமொன்று நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது. நீல நிற உள்ளங்கி வெள்ளைநிறரீசேட்டும் அணிந்த நிலையில் இச்சடலம் காணப்பட்டது; சிலுவை பென்ரனுடனான சங்கிலி கழுத்தில் இருந்தது. இது தப்பியோடிய இராணுவச் சிப்பாயின் சடலமென சந்தேகிக்கப்படுகின்றது. (மு)

## மண்டைதீவில் ஒருவர் படுகாயம்

(மண்டைதீவு)

மண்டைதீவில் இராணுவத்தினால் அபகரிக்கப்பட்ட வீட்டுப் பொருட்களை மீட்பதற்காக சென்ற ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு பலத்த காயமடைந்துள்ளார்.

சாட்டியைச் சேர்ந்த மேகனதாஸ் (வயது 28) என்பவர் நேற்று முன்தினம் முகாம் இருந்த பகுதிக்கு சென்ற போதே இவ் விபத்து ஏற்பட்டது. (க)

## தமிழ்க் குழுக்களுக்கு அரசாங்கம் ஆயுதம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்கும் தமிழ்க்குழுக்களுக்கு இலங்கை அரசாங்கம் ஆயுதம் வழங்குகின்றது என அத் தமிழ்க் குழு ஒன்றின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்பாதுகாப்பிற்காக இலங்கை அரசாங்கம் இந்த ஆயுதங்களை தமக்கு வழங்கியுள்ளதாகவும் அத்தலைவர் தெரிவித்தார்.

## 218 அரச ஊழியர்கள் திருமலையில் வேலையிழப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் வேலைக்குச் செல்லவில்லை என்ற காரணத்தினால் 218 தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமது பதவியினை இழந்துள்ளனர்.

இவர்களின் இடங்களுக்கு தற்காலிக ஊழியர்களை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

சிவில் நிர்வாகத்தை மீண்டும் இயங்க வைக்கும் முகமாக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திருமலை மாவட்டத்தில் பாதுகாப்பு இன்மை கருதியே ஊழியர்கள் வேலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

## ஆயுத விநியோகத்தை பாகிஸ்தானுக்கு நிறுத்துக

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விநியோகிக்க வேண்டாம் என அமெரிக்காவின் அணுசக்தி வல்லுநர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் ஆசிய, பசுபிக் பிராந்திய அமெரிக்க உதவிக் குழுவின் நிர்வாக செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமெரிக்க அணுசக்தித்துறை வல்லுநர்கள் இவ் வேண்டுகோளினை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் அணு ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது எனவும், பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் தேர்தல் தமக்கு நம்பிக்கை தருபவையாக இல்லை என்றும் அக்குழுவின்சார்பில் அதன் தலைவர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அலுவலகம் வராதோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### - யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வரும் திங்கட்கிழமை தொடக்கம் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கோ யாழ். செயலகத்திற்கோ சமுகம் தராத அவற்றின் உத்தியோகஸ்தர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் எச்சரித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பணிபுரியும் ஊழியர்களோ அன்றி யாழ். செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகஸ்தர்களோ எவராயினும் வரும் திங்கட்கிழமை தொடக்கம் தமது அலுவலகங்களுக்கு சமுகம் தர வேண்டும். கடந்த மூன்று மாதங்களாக செய்தது போல் அல்லாமல் இனிமேல் வழமையான அலுவல்களை கட்டாயம் சகலரும் செய்தல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

உத்தியோகஸ்தர்கள் ஊழி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணவில்லை

துரைசிங்கம் தர்மகுலசிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும்(இல520133160V) வாசன லைசென்சும் (இலDL 319626) விளான் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(R/680)

### சித்ராலயா போட்டோஸ்ரட்

சித்ராலய நிறுவனம் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி, நல்லூர். (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலை நேரம்: காலை 9 மணி முதம் 12 மணிவரை

(B- 1454)

### றோனியோ

மீண்டும் றோனியோ தமிழ் தட்டச்சு, சகலவிதமான அச்சுவேலைகளும் காலை 9.00, - 12.00 வரை செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் 138. நாவலர் றோட் யாழ்ப்பாணம் (B. 1459)

## எல்லைப்பிணக்கு தீர்ந்தது

(ஆவரங்கால்)

ஆவரங்கால் சிற்றூர் அவைக்குட்பட்ட பகுதியான மந்திரி மனை என்னும் இடத்தில் பாலசிங்கம் என்பவருக்கும் தம்பிராஜா என்பவருக்கும் பல ஆண்டு காலமாக இருந்துவந்த தோட்டஎல்லைப் பிணக்கு தீர்த்து வைக்கப்பட்டது இந்தவிடயத்தை ஆவரங்கால் மேற்கு சிற்றூர் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, சிற்றூர் அவை அதனைக் கவனமாக அணுகி விசாரணை செய்தது. இருவரும் நடந்து கொண்ட தவறுகளை சிற்றூர் அவையினர் விளக்கி பிணக்கைச் சந்தோஷமாகத் தீர்த்துவைத்தனர். சம்பந்தப்பட்டவர்கள் சிற்றூர் அவையினருக்கு தங்கள் நன்றியைத்தெரிவித்ததோடு தீர்ப்பையும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டுள்ளனர் சிற்றூர் அவையினர் கருத்துத்தெரிவிக்கையில் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறுஒத்துழைத்தால் நாமே பிரச்சினைகளில் இருந்து விலகி நிம்மதியாக இருக்கலாம் என்றார்கள்.

# வன்னிமாவட்டத்தின் இன்றைய நிலை (பகுதி 6)

### இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட உத்தியோகஸ்தர் விபரம்(வவுனியாமாவட்டம்)

| | | |
|---|---|---|
| 01. | அந்தோனிப்பிள்ளை சுகாதார, பரிசோதகர் நகரசபை வவுனியா | சூசைப்பிள்ளையார் குளம் |
| 02. | எஸ் ஜே. பப்ரிஸ் காரியாலய ஊழியர் நகரசபை வவுனியா | சூசைப்பிள்ளையார் குளம் |
| 03. | ஆ. சிறிவிஸ்ணுகாந்தா நீர்ப்பாசன திணைக்கள ஊழியர் | கிளிநொ. ஆலய. முன்பாக |

### சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் சேதமடைந்த பொது ஸ்தாபனங்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 01. | நவஜீவனம் | 4ஆம் யூனிற், தர்மபுரம் |
| 02. | நெசவு நிலையம் | தர்மபுரம் |
| 03. | புனர்வாழ்வு அலுவலகம் | முல்லைத்தீவு |

### சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் காயமடைந்த பொதுமக்கள் விபரம்

| இல. | பெயர் | முகவரி | சம்பவத் திகதி |
|---|---|---|---|
| 1. | ஐ. இராமசாமி | D4 கிளிநொச்சி | 24 6.90 |
| 2. | இ. இராமகிருஷ்ணன் | D5 ,, | ,, |
| 3. | க. இராமலட்சுமி | ஊற்றுப்புலம் | 25.6 90 |
| 4. | ப. நகுலேஸ்வரன் | 374/7 தருமபுரம் | 28 6.90 |
| 5. | வ. மகேஸ்வரன் | 404/7 தருமபுரம் | ,, |
| 6. | சி. சூரியகலா | 114/2 ,, | ,, |
| 7. | மு செல்வராணி | 107 ,, | ,, |
| 8. | ப. சிவராசலிங்கம் | 1 ,, | ,, |
| 9. | பொ. சமல் | 120 ,, | ,, |
| 10. | து. சந்திரவதனி | 37/6 ,, | ,, |
| 11. | ச. பராசக்தி | 55/1 கிளிநொச்சி | 06.7.90 |
| 12. | க சுமணன் | ,, | 31.7.90 |
| 13. | சு. கருப்பையா | உதயநகர் | 12 7 90 |
| 14. | திரு கணேசன் | குமாரபுரம் பரந்தன் | 10 6.90 |
| 15. | செ. சிங்கராசா | 15. கணேசபுரம் | 14.6 90 |
| 16. | இ இராமச்சந்திரன் | ஹரேகிரு கிளிநொ. | 14.6.90 |
| 17. | ஆ கிருஷ்ணகாந்தா | குமரபுரம் பரந்தன் | ,, |
| 18. | எஸ் ஜோசப் | ஐயனார் கோயில் | ,, |
| 19. | து. நாகம்மா | இரத்தினபுரம் கிளி | ,, |
| 20. | ந மனோன்மணி | உதயநகர் மே. கிளி | ,, |
| 21. | த குணரத்தினம் | பாரதிபுரம் கிளிநொ. | 16 6.90 |
| 22. | த வேணுகோபன் | 71திருநகர் கிளிநொ. | 17.6.90 |
| 23. | செ. தாமா | புதியகொலணி | ,, |
| 24. | சே. காசி சுபதிதேவி | மு.தீவு வீதி மாங்குளம் | 18 6 90 |
| 25. | க. சேனாதிராசா | மு.தீவு வீதி மாங்குளம் | ,, |
| 26. | வே சிவபாதசுந்தரம் | புளியம்பொக்கணை | 22 7.90 |
| 27. | திரு கணபதிசிறி | நாகேந்திரபுரம் | 22.7 90 |
| 28. | மு. நடேசர் | 907 திருநகர் கிளி. | 24.7.90 |
| 29. | இ. சூராய் | டி5 கிளிநொச்சி | 25 7.90 |
| 30. | டே. மரியதாஸ் | புலவர்சமம்பள்.கூடி | ,, |
| 31. | ஆ. பத்மநாதன் | அன்னைவே சு.வி.வி | ,, |
| 32. | திரு.பரராசசிங்கம் | ,, | 26.7 90 |
| 33. | திரு செல்வா | ,, | ,, |
| 34. | ச. சதசரத்தினம் | 291, பாண்டியன் கு. | 01.8.90 |
| 35. | வை. ஜெகதீஸ்வரன் | அளிஞ்சிரியன் குளம் | ,, |
| 36. | வள்ளகுசாகு | யோகபுரம் | ,, |
| 37. | சோ. சரவணபவா - னந்தன் | | 22.6.90 |
| 38. | ராணி | | 23 6 90 |
| 39. | சி. புஸ்பா | | 22 6.90 |
| 40. | செ. முத்துலட்சுமி | | 23.6.00 |
| 41. | செ. செல்வகுமார் | | ,, |
| 42. | க. கணேசன் | | ,, |
| 43. | செ. இராசகுமாரி | | ,, |
| 44. | பா. திலகவதி | | ,, |

(தொடரும்)

### கட்டுப்பாடு

பூநகரியில் பெரும்போக காலம் ஆரம்பித்து விட்டமையால் 01-10-90ஆம் திகதி முதல் கால்நடை உரிமையாளர்கள் தமக்குரித்தான கால்நடைகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்கோள் விடுத்துள்ளது.

விவசாயிகளின் நன்மையைக் கருத்திற் கொண்டே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக் கட்டுப்பாட்டை மீறும் கால்நடை உரிமையாளர்களை சிற்றூரவைகள் கண்காணித்து வட்ட அவையிடம் அறிவிக்க வேண்டும். வட்ட அவை மூலம் அவற்றுக்குரிய தண்டப்பணம் அறவிடப்படும். இக் கட்டுப்பாடு 31 - 3 - 91ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(71


## ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

## அஞ்சல் கல்விச் சேவை

(வலிகாமம் பிரிவு)

எமது நிறுவனத்தில் பயின்று கொண்டிருக்கின்ற. இதுவரை எமது நிறுவனத்தில் பயிலாத யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் வதியும் ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்கள் இக் கல்விச் சேவையில் பயில விரும்பின் மாணவர்களின் பெயர்களை அவர்களது பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் 9 10. 1990 அன்று அல்லது அதற்கு முன்னதாகப் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும்.

பதிவு ஏற்றுக்கொள்ளப் படும நேரம்
தினமும் காலை 9. 00 மணிதொடக்கம் 12. 00 மணிவரை

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

**யூனிவேர்சல்**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(B- 1452)


## 3ஆம் ஆண்டுநினைவஞ்சலி



### கணபதிப்பிள்ளை நகுலகுமார் (மேஜர் அப்துல்லா)

தாயக மண்ணில் 20-07-1963 — தாயகமீட்பில் 05-10-1987

திதி: 04-10-90

வல்வைக்கடலலைகள் சொல்லும் கதை கேளீர்...
கடல்நீர் கண்ணீராய் மாறும் கதை பாரீர்
எங்கள் தாய் மண்ணில்
எழுந்த இளங்கதிர்கள்
இங்கொரு விடியலுக்காய்
சிவந்த விழி கொண்டோர்
அந்நியக் கொடுமையினால்
அஸ்தமித்த கதை பாரீர்.........
அஸ்தமித்த வேளையிலும்.........
அடுத்தகணம் விடுதலைக்காய்
உத்வேகம் பிறக்கின்ற
உணர்ச்சிகளைத் தோற்றுவித்தார்.......
அப்துல்லா .......ஓ.........அபதுல்லா!
ஆர்த்தெழுந்த வேங்கையனே!
அடிமைச்சின்னங்கள்... .....
அழிந்தொழியும் நேரமிது
போர்க்களத்தில் ஆயிரவர்
உன்னுணர்வால் ஜனிக்கின்றார்......
புலர்கின்ற வேளையிலே
பூத்திடுவாய் புதுமலராய்......!

- குடும்பத்தினர்

B. 1449


# பிளவ்ஸ் ஹோட்டல்

❋ மக்கள் நலன் கருதி நாற்பது ஆண்டுகள் தொடர்ச்சியான சேவை

❋ உணவு வகைகளைச் சுவையாகத் தரும் இணையற்ற உணவகம்

❋ காலை 6 மணி முதல் மாலை 8 மணி வரை திறந்திருக்கும்

**உங்கள் திருப்தியே எங்கள் நிறைவு**

## பிளவ்ஸ் ஹோட்டல்

ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(B - 1458)

## சிந்தனைக்கு

*நான் காணும் இலட்சியத் தோட்டி,*
*சிறந்த பிராமணனாய் இருப்பான்;*
*அவனை மிஞ்சவும் கூடும்.*

- மகாத்மா காந்திஜி


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 04-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## ‘தாழ்த்தப்பட்ட’ இந்தியர்

கௌதமபுத்தரில் இருந்து மகாத்மாகாந்தியூடாக வி. பி. சிங் வரை ‘இரட்சகர்கள்’ ‘மகாத்மாக்கள்’ அரசியல்வாதிகள் ஆகியோர் இந்தியாவில் உள்ள ‘தாழ்த்தப்பட்ட மக்களின்’ உரிமைகளைப் பற்றிப் பெரியளவில் பேசியுள்ளார்கள்.

இந்தியாவில் ‘தாழ்த்தப்பட்ட மக்களின்’ எண்ணிக்கை ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்டதாகும். அதாவது இந்தியாவில் இன்று கொப்பளித்துக்கொண்டிருக்கும் இன மொழிப் பிரச்சினைகள் பிராந்தியங்களுக்குரியவை. அத்தோடு சிறிய விகிதாசார மக்களுடனும் தொடர்புபட்டவை. ஆனால் இத் ‘தாழ்த்தப்பட்டமக்களின்’ பிரச்சினை முழு இந்தியாவிற்கும் உரியதாகும். அதாவது வடக்கே இமயத்தில் இருந்து தெற்கே கன்னியாகுமரி வரையுள்ள பிரச்சினையாகும்.

இவ்வாறு நாடு பூராவும் பரந்துள்ள இம் மக்களுடன் தொடர்புள்ள இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இன்று இந்தியாவில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது. சாதி அடக்குமுறையை ஆதரிப்போரால் தேசிய முன்னணி அரசாங்கமே ஆட்டம் கண்டுள்ளது. இதிலிருந்து சாதி அடக்குமுறை அங்கு எவ்வளவு வலுவாகவுள்ளது என்பது தெரிகின்றது.

‘தாழ்த்தப்பட்ட மக்களுக்கு’ இட ஒதுக்கீடு செய்யும் மண்டல் கமிஷன் அறிக்கையை தேசிய முன்னணி அரசாங்கம் அமுல்படுத்துவதை எதிர்ப்பதில் இன்று ‘உயர்சாதி’ மாணவர்களுடன் ‘உயர்சாதி’ விவசாயிகளும் சேர்ந்து போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள். இதுவரை இப்பிரச்சினையில்எழுபதிற்குமேற்பட்டோர்இறந்துள்ளனர்.

ஆனால் இந்தியாவின் வடபகுதியில் இடஒதுக்கீட்டிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வரும் வேளையில் தென்இந்தியாவில் ஆதரவான ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியுள்ளன தமிழ் நாட்டிலுள்ள திராவிடகழகங்கள் உட்பட இந்தியாவிலுள்ள இடதுசாரிகள் மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்துவதில் வி பி. சிங்கின் சிறுபான்மை அரசிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

மண்டல் கமிஷன் அறிக்கையை பிரதான எதிர்க்கட்சிகளான இந்திரா காங்கிரஸ் கட்சி உட்பட அரசை ஆதரிக்கும் பாரதிய ஜனதாதளக்கட்சியும் வேறு பல எதிர்க்கட்சிகளும் எதிர்க்கின்றன. இருந்தும் தம் எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவிக்க அவர்களால் முடியவில்லை. தீர்ப்பை வெளிப்படுத்தினால் நாட்டில் பெரும்பான்மையினரான ‘தாழ்த்தப்பட்ட மக்களின்’ எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டும். இதனால் எதிர்கால தேர்தல் லாபங்கள் பாதிக்கப்படும் என்பதால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

‘தாழ்த்தப்பட்ட மக்களுக்கு’ இட ஒதுக்கீட்டிற்கு எதிராகஎழுந்துள்ள இத்தகைய நிலையானது இந்தியாவின் உண்மை நிலைமையை வெளியுலகிற்குத் தெளிவாக விளக்குகின்றது.

இந்தியாவில் பேச்சுக்குப்பேச்சு பேசப்படும் ‘காந்தியம்’ எந்தவொரு மாற்றத்தையும் அன்றும், ஏன் இன்றும் (50 வருடங்களின் பின்பும்) செய்யவில்லை என்பது தெரிகின்றது.

அத்தோடு ஜனநாயகம், ஒரு சிறு பணம் படைத்த ‘உயர்சாதி வகுப்பினரின்’ கைப்பாவையாக மாறிவிட்ட தன்மையையும் காட்டுகின்றது.

தென் ஆபிரிக்காவில் கறுப்பின மக்களை சிறுபான்மையினரான வெள்ளையர்கள் அடக்கி ஒடுக்குவதாக இந்தியா உலக அரங்கில் கூக்குரல் இடுகின்றது. ஆனால் சாதி என்ற போர்வையில் இந்தியாவிலும் அவ்வாறானதொரு அடக்குமுறை தொடர்ந்து இருந்து வருகின்றது.

இந்தியாவில் உள்ள ‘தாழ்த்தப்பட்ட மக்களின்’ பிரச்சினையும் தென் ஆபிரிக்காவில் உள்ள கறுப்பின மக்களின் பிரச்சினையும் வேறுபாடான தன்மை கொண்டவையல்ல.

இந்தியாவில் உள்ள அதிகாரம் பொருந்திய ‘உயர்சாதி’ சிறுபான்மை மக்களினால் ‘தாழ்த்தப்பட்ட’ பெரும்பான்மை மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றார்கள்.

‘தாழ்த்தப்பட்ட மக்களுக்கு’ வாக்குரிமை மட்டும் வழங்கப்பட்டதனால் அவர்களின் உரிமை வழங்கப்பட்டதாகவும் அவர்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாகவும் ‘உயர்சாதி வகுப்பினர்’ கருதுகின்றார்கள். ஆனால் இவர்கள் இன்றும் பொருளாதார அடக்கு முறையில் இருந்து சிறிதளவும் விடுபடவில்லை.

இன்று பல நெருக்கடியின் மத்தியில், பலவீனமான நிலையில் வி. பி. சிங் அரசாங்கம் மண்டல் கமிசன் அமுலாக்கத்தை எடுத்துள்ளது. இவ்விட ஒதுக்கீட்டுப் பிரச்சினையை பிரதமர் வி. பி. சிங் எடுத்துக்கொண்டமை ‘வேறு உள்நோக்கம்’ கொண்டதாக இருப்பினும், முற்போக்கான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை.

# ‘தாழ்த்தப்பட்டோருக்கு’ இட ஒதுக்கீடு
# சோதனைக்களத்தில் வி. பி. சிங்

மண்டல் கமிஷனின் சிபாரிசுகளை அமுல் நடத்தும் தீர்மானம் வி.பி.சிங் அரசிற்கு பெரும் மண்டையிடியைத் தோற்றுவித்துள்ளது. ஏற்கனவே சிறுபான்மை பலத்துடன் ஊசலாடிக் கொண்டிருக்கும் வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசு இந்தத் தீர்மானத்தினால் மேலும் ஆட்டம் கண்டிருக்கின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான வகுப்புவாதம், அகன்ற பாரதம் என்னும் மையக் கருத்து, பாரதத்தின் பழம் பெருமைகள், தீவிரமான இந்து மதத் தத்துவச்சார்பு ஆகியவற்றைக் கொண்டது பாரதீய ஜனதாக் கட்சி, இடதுசாரிக் கட்சிகளினதும், பாரதீய ஜனதாக் கட்சியினதும் துணையோடு ஏனைய கட்சிகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட ஜனதா தள், மாநிலக் கட்சிகளான தெலுங்குதேசம், திராவிட முன்னேற்றக் கழகம், அஸாம் கண பரிஷத் போன்றவற்றின் அனுசரணையோடு அமைக்கப்பட்டதுவே தேசிய முன்னணி அரசாகும்.

இந்தியப் பாராளுமன்றமான லோக்சபாவில் தனிப் பெரும்பான்மையைக் கொண்டிராத போதும், வி. பி. சிங்கின் புத்திசாதுரியமான அணுகுமுறையினாலும், அரசியல் விவேகம் மிகுந்தநடவடிக்கைகளாலும், அதிர்ஷ்டவசமாக மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது தேசிய முன்னணி. ஏற்கனவே பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சி நீடிப்பு காஷ்மீரின் கலவரங்கள், பாபர் மசூதி - ராம ஜன்ம பூமி நெருக்கடி, அஸாமின் சிக்கல்கள், ஊழல் மன்னர்களின் ஏமாற்றுக்கள் என்பன போன்ற பல்வேறு பிரச்சினைகளால் சூழப்பட்டிருக்கிறது வி. பி. சிங். அரசு. அத்துடன் உடனிருப்போர் பின்னும் சதி வலைகளையும், வைக்கும் சூழ்ச்சிப்பொறிகளையும் தகர்க்க வேண்டிய அவசிய தேவையும் நீடிக்கவே செய்கிறது.

### துணிச்சல் மிகுந்த முடிவு

இந்த நிலையிலுள்ள அரசு மண்டல் கமிஷன் சிபாரிசுகளை அமுல் நடத்துவது என்று எடுத்த தீர்மானம் ஒரு துணிச்சல் மிகுந்த நடவடிக்கையே என்பதில் சந்தேகமில்லை. ஆண்டாண்டு காலமாகத் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் அதிகளவு இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற கோரிக்கை தீவிரம் பெற்ற

**இனியவன்**

போது தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளைச் சிபாரிசு செய்யும்படி கோரி அமைக்கப்பட்டது மண்டல் என்பவரின் தலைமையிலான கமிஷன். இதுவே மண்டல் கமிஷன் என அழைக்கப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்திலேயே இந்தியா முழுவதும் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் காட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள். அம்பேத்கரின் கோரிக்கையை ஏற்று தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசியல் அமைப்பின் வாயிலாகவே பன்னிரண்டு சதவிகித இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

தற்காலிக ஏற்பாடாக கொண்டுவரப்பட்ட இந்த ஒதுக்கீடு சுமார் 25 வருடகால முன்னேற்றத்தின் பயனாக நீக்கப்படும் நிலை வரலாம் என்றே அன்றைய இந்தியத் தலைவர்கள் கனவு கண்டனர். ஆனால் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சரியான முறையில் ஊக்குவிக்கப்படாமையினாலும், இந்தியா முழுவதும் நிலவும் சாதிப்பாகுபாட்டின் இறுக்கத்தன்மையினாலும், முன்னேறிய சமூகங்களின் விட்டுக்கொடுக்காத அடக்குமுறையினாலும் இந்தப் பன்னிரண்டு சதவிகித இட ஒதுக்கீடு எந்தப் பயனையும் விளைவித்து விடவில்லை.

இதனால் ஹரியின் - புத்திரர்கள் அதாவது ‘கடவுளின் குழந்தைகள்’ என மகாத்மா காந்தியினால் வர்ணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் கிளர்ந்து எழுந்தனர். கோரிக்கைகள் விடுத்தனர். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அச்சமயம் அவர்களைச் சாந்தமாக்கும்பொருட்டு அமைக்கப்பட்டது மண்டல்கமிஷன். இக் கமிஷன் இந்தியா முழுவதிலும் வாழும் மக்களிடையே நிலவும் சாதிய ஒடுக்குமுறை பற்றி ஆராய்ந்தது. இந்து மதத் தத்துவங்களைக் காரணம் காட்டி சூத்திரர் என்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை நிலை என்பன குறித்துக் கவலைகொண்டது. உள்ளங்களால் இணைக்கப்படாத இந்தியர்களைக் கொண்ட இந்தியா பற்றி ஏங்கியது. மக்கள் ஆவேச எழுச்சிகொண்டு கிளர்ந்து எழுந்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிக் கற்பனை பண்ணிப் பார்த்தது. இவற்றின் காரணமாக சீர்திருத்த நோக்குடன்சில சிபாரிசுகளை முன்மொழிந்தது. (தொடரும்)

### இட ஒதுக்கீடு சம்பந்தமான
# நீதிமன்ற இடைக்காலத் தடையை எதிர்த்து நாடு தழுவிய போராட்டம்

- கருணாநிதி அறிவிப்பு

(டில்லி)

இந்தியாவில், இட ஒதுக்கீடு குறித்து உயர்நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையை எதிர்த்து நாடு தழுவிய போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

பின் தங்கியவகுப்பினரிக்காக தாம் நீண்டகாலம் போராடி வந்ததாகவும், தேசிய முன்னணி அரசாங்கத்தின் மூலம் இதனை நடைமுறைப் படுத்த விரும்பியதாகவும் தெரிவித்த கருணாநிதி, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தனக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இதனால் தாம் இதனை எதிர்த்து நாடு தழுவிய போராட்டங்களை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை புதுடில்லியில் இடஒதுக்கீடு குறித்து அரசாங்கத்தின் நிலையினை எதிர்த்து நடந்த பேரணி ஒன்றில் இடம் பெற்ற கலவரங்களில் மூன்று பேர் உயிர் இழந்துள்ளனர்.

விவசாயிகளும், மாணவர்களும் கலந்துகொண்ட ஊர்வலத்தின்போது ஊர்வலத்தில் ஒரு பகுதியினர் (குறைந்தது 4000பேர்) பொலிசாரை சுற்றிவளைத்துத் தாக்கினர் என்றும், இத்தாக்குதலில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் பொலிசார் சுட்டதில் இரண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அரசாங்க கட்டிடங்களையும், வீடுகளையும் எரித்ததாகக் கூறப்படுகிறது.

இந்த ஊர்வலத்தில் குறைந்தது இரண்டு லட்சம் பேர் கலந்துகொண்டதாக கூறப்படுகிறது.

இதில் கலந்துகொள்வதற்காக விவசாயிகள் பிற மாநில கிராமங்களில் இருந்து வரவழைக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

# காஷ்மீரில் இராணுவத்தின் சூட்டுக்கு 15 பேர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஹத்வார் நகரில் நேற்று முன் தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 15 பேர் உயிர் இழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஹத்வார் நகரில் முஸ்லிம் தீவிரவாதிகளினால் பராமிலிட்டரி இராணுவவீரர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இந்த 15 பொதுமக்களும் உயிர் இழந்ததாகக் கூறப்படுகிறது.

சந்தை ஒன்றில் குழுமியிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகளும், வீடுகளும் எரிக்கப்பட்டன. தீயணைப்புப் படையினர் சேவையில் ஈடுபடுவதற்குராணுவத்தினர் விடவில்லை எனவும் கூறப்படுகிறது.

## உடைவழங்கல்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கி உள்ளவர்களுக்கு உடுபிடைவைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கிவருகிறது. உடுப்புக்கள் தேவைப்படும்அகதிமுகார் நிர்வாகிகள் தமிழர் புனம் வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும். (க)

### இராணுவ நடவடிக்கைகளால் மூன்று வாரத்தில்

# யாழ். மாவட்டத்தில் 54 பேர் கால்களை இழந்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் யாழ். மாவட்டத்தின் மீதான இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்த மூன்று வாரங்களில் மட்டும் ஐம்பத்தி நான்கு பேர் கால்களை இழந்துள்ளனர் என மானிப்பாய் வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் தமது கணிப்பீட்டை தெரிவித்துள்ளனர்.

இவ் வைத்திய அதிகாரிகள் மேலும் கூறுகையில் சிறிலங்கா அரசின் இந்த இராணுவ நடவடிக்கைகளினால் எமது இள வயதினரில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் நீண்ட கால அங்கவீனர்களாகி வருவது மிகவும் மனம் வருந்தத்தக்கது எனவும் தற்போதய நிலையில் இந்த இளைஞர்களுக்கு செயற்கைக் கால் பொருத்துவதிற்கான வசதிகள் எதுவும் உடன் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. செயற்கைக் கால்கள் போடப்பட்டாலும் அவை இயற்கையானவைக்கு எக்காலத்திலும் இணையானவை அல்ல எனவும் அவர்கள் தெரிவித்தனர். (லோ)

## நான்கு மாதம் சம்பளம் இல்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரச கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் ஊழியர்கள் கடந்த நான்கு மாத காலமாக எவ்வித சம்பளக் கொடுப்பனவுகளும் இது வரை தமக்கு வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர். இது விடயமாக கொழும்பில் இயங்கும் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறு மேற்படி ஊழியர்கள் உயர் அதிகாரிகளை வேண்டுகிறார்கள். இக் கூட்டுத்தாபனத்தில் அறுபத்தெட்டு ஊழியர்கள் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (மு)

## பன்னிரு வேங்கைகளின் 3ஆம் ஆண்டு நினைவு நாள்

(வடமராட்சி)

பலாலி இராணுவமுகாமில் சயனைட் வில்லைகளை உட்கொண்டு வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியுமாகிய லெட்டினன் கேர்ணல் குமரப்பா, திருமலை மாவட்டத் தளபதி லெப். கேர்ணல் புலேந்திரன் உள்ளிட்ட பன்னிருவேங்கைகளின் மூன்றாம் ஆண்டு நினைவையொட்டி எழுச்சி ஊர்வலமும், அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

இந்த நினைவு நாளன்று வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் அமைந்துள்ள இவ்வீரர்களின் நினைவாலயத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் வீரமரணமடைந்த நேரமானமாலை 5.05மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் வல்வெட்டித்துறைநெடியகாடு பிள்ளையார் கோவிலில் இருந்தும், நெல்லியடி மூத்தவினாயகர் ஆலயத்தில் இருந்தும்பிற்பகல் 2.00 மணிக்கு ஊர்வலங்கள் ஆரம்பமாகி தீருவில் மைதானத்தை சென்றடையும்.

இதேபோன்று தென்மராட்சி பகுதிமக்கள் கொடிகாமத்தில் இருந்து பி.ப 2 30 மணிக்கு ஊர்வலமாகவும் வலிகாமம் பகுதிமக்கள் அச்சுவேலியில் இருந்தும் ஊர்வலமாகசென்று தீருவில்மைதானத்தை அடைவார்கள்.

சகல மக்களையும் இந்த நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு நினைவஞ்சலி குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (18)

## பொறியியலாளருக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் கீழ் குறிப்பிடப்படும் திணைக்களங்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பொறியியலாளர்கள், கட்டடக்கலைஞர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரையும், யாழ். மாநகர சபை எல்லைக்குள் அடங்கும் யாழ்ப்பாணம், நல்லூர்உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள கிராமசேவை உத்தியோகஸ்தர்களையும் நாளை 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8–30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கலந்து கொள்ளவேண்டிய நிறுவனங்கள் இலங்கை மின்சாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தெருக்கள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, கட்டடத்திணைக்களம், தொலைத்தொடர்பு திணைக்களம், உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். கல்வித்திணைக்களம், யாழ்: மாநகர சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கச்சேரி, யாழ்.பல்கலைக்கழகம், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, லங்கா சிமெந்துத் தொழிற்சாலை ஆகும்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(பூநகரி)

பூநகரியில் 1987ஆம் ஆண்டு இறந்த பன்னிரண்டு வேங்கைகளின் 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

இக் கூட்டத்திற்கு பூநகரி பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் சாம், மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சுரேஷ் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (71)

## கிளிநொச்சி தபால் ஊழியர் உடன் கடமைக்கு வரவும்

(கிளிநொச்சி)

'கிளிநொச்சி, பரந்தன் தபால் கந்தோர்களில் கடமையாற்றிய சகல ஊழியர்களையும் உடனடியாக கிளிநொச்சி தபால் கந்தோருக்கு வந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்கவும்'

இவ்வாறு வவுனியா மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது

பரந்தன் தபால் கந்தோர் கட்டிடம் சேதமுற்றுள்ளதால் கிளிநொச்சி தபால் கந்தோர் கட்டிடத்திலேயே பரந்தன் தபால் கந்தோரும் இயங்கி வருகிறது.

இதுவரை கடமைக்குச் சமுகமளிக்காத கிளிநொச்சி பரந்தன் தபால் ஊழியர்கள் உடனடியாக கடமைக்குச் சமுகமளிக்கும்படி கேட்டுள்ளார். (49)

## இறந்த கூட்டுறவு ஊழியருக்கு நஷ்டஈடு

(கொழும்புத்துறை)

தீவிரவாத நடவடிக்கைகளின் போது இறந்த சகல கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளின் போது இறந்த ஒவ்வொரு கூட்டுறவுத்துறைச் சகல ஊழியருக்கும் இப்புதிய திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## காங்கேசன் இராணுவத்தால்; நெருக்கடி, பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகம் தொடர்ந்து மூடப்பட்டிருக்குமானால் யாழ். குடாநாட்டில் மிகவிரைவில் பெருமளவிலான உணவு மற்றும் மருந்துப்பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன் துறைமுகத்தில் இராணுவம்முகாம் அமைத்து இருப்பதனால் இந்த இறங்குதுறையைப் பாவித்துத் தாராளமான உணவுப் பொருட்களைக் கொண்டுவரமுடியாத நிலை உள்ளது பருத்தித்துறை இறங்குதுறை மூலம் கொண்டுவரப்படும் உணவுப் பொருட்கள் அன்றாடதேவைகளுக்கே போதுமானதாக இருக்கும் என்பது ஏற்கனவே அறிந்த தொன்றாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் யாழ். மாவட்டத்திற்கு ஓர் நீண்டகால உணவு மருந்து பற்றாக்குறை இருந்து கொண்டே இருக்கும். ஆகவே யாழ். மாவட்ட மக்களுக்கு காங்கேசன்துறை இறங்குதுறை மூலம் உணவு, மருந்து வகைகளை உடன் கொண்டு வரவேண்டியது மிக அவசியமானது எனவும் அவர் கூறி உள்ளார். (லோ)

## மானிப்பாய் வங்கி இயங்குகிறது

(கொழும்புத்துறை)

மானிப்பாய் இலங்கை வங்கி கடந்தவாரம் முதல் காலை ஒரு மணித்தியாலம் செயல்பட்டுவருகின்றது.

இவ் வங்கியின் வாடிக்கையாளர்கள் அலுவலக நேரத்தில் சென்று தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இராணுவ

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழிமறித்து கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் இராணுவ ஜீப்வண்டி ஒன்று முற்றாகச் சேதமடைந்தது. உயிரிழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கைபற்றிய விபரம் தெரியவில்லை. (க)

### கிளிநொச்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசசபையின் நிர்வாக அதிகாரி திரு. சுப்பிரமணியக் குருக்கள் அலுவலகக் கட்டிடம் சேதமானதால் 69 லட்சத்து 66 ஆயிரம் ரூபா வரையும், நகர மண்டபம சேதமானதால் 15 லட்ச ரூபாவும், களஞ்சிய சாலை சேதமானதால் 8 லட்சம் ரூபாவும், நூலகத்தில் இருந்த புத்தகங்கள் எரியுண்டதால் 7 1/2 லட்ச ரூபாவும், மின்சார சேதங்களால் 10 லட்ச ரூபாவும், பரந்தன் சந்தை சேதமானதால் 10 லட்ச ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தவிர பரந்தன் நூலகம், பாலர் பாடசாலை முதலானவையும் சேதத்தைத் தழுவியுள்ளதாகவும் இது சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார் (49)

### ஆயுத

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீபன் ஸ்ரோலஸ் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பாகிஸ்தானில் அணுசக்தி உற்பத்தி நடைபெறவில்லை என்று கூறி 60கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை வழங்குவதற்கு இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### அலுவலகம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் ஆகியோரின் வரவுகள் இனிமேல் கடுமையாக கண்காணிக்கப்படும் எனவும் யாழ். அரச அதிபர் கடுமையாக தெரிவித்துள்ளார். (லோ(

### சிறிலங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ததே. இலங்கை அரசின் இனவாதப் போக்கை இத்தகைய நிறுவனங்கள் வெளிப்படையாகக் கண்டனம் தெரிவித்து வந்தமையும் அறிந்ததே. இத்தகைய செயற்பாடுகள் வன்முறையாளர்களைஊக்குவிப்பதாகவும், பிரிவினைவாத சக்திகளுக்கு ஆதரவளிப்பதாகவும் இலங்கைக் கிறிஸ்தவ மதபீடம் குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

### மூன்று தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலிங்கப்போடிலிங்கம் (18), கந்தையா விக்கினேஸ்வரன் (30), குமாரசாமியோகன்(22) ஆகியோர் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

### தொழிலாளி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாய் போதனா வைத்தியசாலைப் பிரிவில் உறவினர்களின் ஆதரவு கூட இல்லாமல் அனாதரவான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார் (க)

## நஞ்சருந்தித் தற்கொலை

(நல்லூர்)

அத்தியடியில் வசிக்கும் திருமதி விஜியராணி பிரேம்நாத் (வயது 26) நச்சு மருந்து உட்கொண்டு மரணமானார். அதேவேளை அவரது தாயாரும் நச்சு மருந்தை உட்கொண்டு மிகவும் ஆபத்தான நிலையில் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

### பெண்மணி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளைகளுடன் தமது வீட்டை பார்வையிடச் சென்ற போது இவர்களைநோக்கி இராணுவத்தினர் சுட்டனர். இச் சம்பவத்தில் இவரின் பிள்ளைகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. (க)

### ஐந்து ஊர்காவற்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் கைப்பற்றப்பட்டன. சொட்கண் - 1, 303 துப்பாக்கி – 1, தோட்டாக்கள் - 8, ரவைகள் - 20 (க)

### சிகரெட்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

3 1/2 பக்கற் சிகரெட்டுகளைத் தன்வசம் வைத்திருந்து சிகரெட் ஒன்றை 3 ரூபாவிற்கு விற்பனை செய்த சமயம் விடுதலைப் புலிகளிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர், தான் செய்தது குற்றம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்.


## மரண அறிவித்தல்

### திருமதி விஜியவாணி பிரேம்நாத்

அத்தியடியைச் சேர்ந்த திருமதி விஜியவாணி பிரேம்நாத் 03 - 10 - 90 புதன்கிழமை காலமானார். இவர் திரு சோ. பிரேம்நாத் (ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி, நியூ சயன்ஸ் அக்கடமி) அவர்களின் அன்பு மனைவியும், திரு, திருமதி குமாரசாமி அவர்களின் அன்பு மகளும், கணேஸ்வரன் (LONDON), விஜியலக்சுமி (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி சோமசுந்தரத்தின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 70, அத்தியடி புதிய வீதியில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

''லக்சுமி பவனம்''
70, அத்தியடி புதியவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
S. பிரேம்நாத்

(R/700)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்த்திலுள்ள " ஈழநாதம் " பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.